பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை13 வெள்ளிக்கிழமை (28.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:002

# இந்தியப் பேரசுடன் உறவுகளை புதுப்பிக்க பிரபாகரன் அழைப்பு



## மாவீரர்தின உரையில் நேசக்கரம் நீட்டிச் செய்தி

வன்னி, நவம்பர் 28

"இன்று இந்திய தேசத்திலேயே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக் கிடந்த எமது போராட்ட ஆதரவுக் குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன.

"எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற ஏது நிலைகள் வெளிப்படுகின்றன. கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத்திற்கேற்ப இந்தியப் பேரரசுடனான அறுந்துபோன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகின்றோம்" - இவ்வாறு இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டி அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன்.

தமது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - வருடாந்த - மாவீரர் தின உரையிலேயே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நேற்று இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட பிரத்தியேக மையத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் பிரபாகரனும் ஏனைய தளபதிகளும் நேற்று மாலை பங்குபற்றினர்.

அந்நிகழ்வின் ஆரம்பத்தில் அவரின் மாவீரர் தின உரை இடம்பெற்றது. அதில் அவர் கூறியவை வருமாறு:-

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக் கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. (08 ஆம் பக்கம் பார்க்க)

## மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல்; பணயக் கைதிகள் கொல்லப்பட்டனரா?

மும்பை, நவ.28

மும்பையில் பிரபல ஹோட்டல்களில் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டோரை விடுவிப்பதற்கு இந்திய இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர். நேற்று பிற்பகல் வரை இரு ஹோட்டல்களிலிருந்தும் குறிப்பிட்ட ஒரு தொகையினரை மட்டுமே மீட்க அவர்களால் முடிந்தது. ஏனையோரை மீட்கும் முயற்சி நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்தது என புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் ஹோட்டல்களில் பணயக்கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டவர்களிடம் நீங்கள் அமெரிக்கரா? பிரிட்டிஷ்காரரா? என்று தீவிரவாதிகள் கேட்டுக்கேட்டு - கதறக்கதறச் சுட்டுக்கொன்றனர் எனவும் தகவல்கள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழிக்க பிராந்திய நாடுகள் ஒன்றுபட வேண்டும்



### குண்டுத் தாக்குதலுக்கு மஹிந்த கண்டனம்

கொழும்பு, நவ.28

இந்திய வர்த்தக மத்திய நிலையங்கள் மீது தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களை கொலை செய்து இந்தியாவின் ஜனநாயகத்தை ஸ்திரமற்றதாக்குவதற்காகவே பயங்கரவாதிகள் மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனைக் கடுமையாகக் கண்டிப்பதோடு பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழிக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்தினத்தைக் குழப்பும் நோக்கில் வந்த ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல் முறியடிப்பு

கிளிநொச்சி, நவ.28

வன்னிப் பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய தாக்குதல் முயற்சி தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று முறியடிக்கப்பட்டது என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவீரர் தின நிகழ்வுகளை குழப்பும் வகையில் நேற்று வியாழக்கிழமை தாக்குதல் நடத்த வந்த படையினரின் ஆழ ஊடுருவும் அணி மீதே விடுதலைப் புலிகள் முறியடிப்பு தாக்குதலை நடத்தினர் எனவும், இத்தாக்குதலில் ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டு அவரின் உடல் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் நேற்றும் ஆயுததாரிகள் நான்கு பொதுமக்களை சுட்டுக்கொன்றனர்!

மட்டக்களப்பு, நவ. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் நேற்று அதிகாலை வரையான 12 மணி நேரத்துக்குள் மதகுரு உட்பட நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு - மாமாங்கம் சிவமுத்து மாரியம்மன் கோவில் பிரதம குருக்கள் சுப்பிரமணியம் கமல் ராஜ் (வயது-32) என்பவர் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் கோவிலில் இருந்து அதே பகுதியில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போதே அவர் மீது இனந்தெரியாத நபர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது விமானப்படையினர் நேற்று மாலை குண்டுவீச்சு

கிளிநெச்சி, நவ.28

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ வானொலியான புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது விமானப் படையினர் நேற்று மாலை தாக்குதல் நடத்தினர்.

கிளிநொச்சியில் உள்ள புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது நேற்று வியாழக்கிழமை மாலை 5.15 நிமிடமளவில் விமானப் படைக்குச் சொந்தமான மிக்-27 ரக விமானங்கள் இரண்டு தடவைகள் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதில் புலிகளின் குரல் வானொலி நிலையத்தின் ஒலிபரப்புக் கருவிகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. கடந்த வருடமும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழரின் பிரச்சினைக்கு சுதந்திரத் தமிழீழமே ஒரேயொரு தீர்வு; புலிகள் மீதான தடையை சர்வதேசம் நீக்க வேண்டும்

## பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வைகோ வலியுறுத்து



லண்டன், நவ.28

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு சுதந்திரத் தமிழீழமே ஒரேயொரு தீர்வு என மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தமிழர்களுக்கான பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிக்குழு மத்தியில் உரையாற்றுகையில் ஆணித்தரமாக தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதியை மாற்ற வேண்டிய தார்மீகக் கடப்பாடு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யுத்த நிறுத்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகி இலங்கை அரசின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவிக்குமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை சர்வதேச சமூகம் விலக்க வேண்டும் எனவும் வைகோ கோரியுள்ளார்.

சோல்பரி அரசமைப்பின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரான [illegible] சுதந்திர இலங்கையின் கீழ் தமிழர்களின் நிலையை கண்ணுற்ற வேளை சோல்பரி அரசமைப்பு மூலம் இழைக்கப்பட்ட அநீதிக்காக கவலையடைந்ததாக வைக்கோ தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை தனது உரையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்தினால் நேற்றுவரை குடாநாட்டில் ஐவது பேர் பலி!

யாழ்ப்பாணம், நவ.28

குடாநாட்டில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி நால்வரும் மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒருவரும் பலியாகினர்.

வெள்ளத்தில் கிணறு மூடியிருந்தமை தெரியாமல் அதனுள் தவறி வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். பனிப்புலம், பண்ணாகத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் பாலகிருஷ்ணன் (வயது 41) என்பவரே இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவராவார்.

வீதியில் சென்றபோது தவறுதலாக மதகினுள் வீழ்ந்ததில் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். சங்குவேலி வடக்கைச் சேர்ந்த தவராஜா தோன்மொழி (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கோயில் கிணற்றில் தவறிவீழ்ந்ததில் இளவாலையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் பாலகிருஷ்ணன் என்பவர் உயிரிழந்தார்.

இதேவேளை -குளத்தில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கியும் பனை முறிந்து வீழ்ந்ததில் மூதாட்டி ஒருவரும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-202-203-25-29)

(முன்னர் வந்த செய்திகள் 7 ஆம் பக்கத்தில்)

## வலிகாமத்தில் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ.28

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சூறாவளி, வெள்ளப் பெருக்கு காரணமாக, வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நடை பெறவிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகள் சில, பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர், ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

புதிய பரீட்சை நேர அட்டவணை பின்வருமாறு அமையும் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். நேற்று நடைபெறவிருந்த தரம் 10 பரீட்சைகள் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமையும் 28இல் நடைபெறவிருந்த பரீட்சைகள் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடை பெறவுள்ளன.

இந்த வார இறுதியில் நடைபெறவிருந்த ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் பிற்போடப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. செயலமர்வுக்குரிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### அண்ணாமலை கந்தையாப்பிள்ளை துரைராசசிங்கம் (A.K.T)

காரைநகர், சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கடற்கரை வீதி, நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை கந்தையாப்பிள்ளை துரைராசசிங்கம் 25.11.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நீர்கொழும்பில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மில் வீதி,*
*இடைப்பிட்டி,*
*காரைநகர்.*

தகவல்:
வேலுப்பிள்ளை நடராசா
(மைத்துனர்).

### கிறிஸ்தோபர் றேமன் சலேஷியஸ் (ஜே.பி.)

(முன்னாள் உபதபாலதிபர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் உபதபாலதிபர் கிறிஸ்தோபர் றேமன் சலேஷியஸ் (ஜே.பி.) 26.11.2008 அன்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை மேரியோசப்பின் அன்புக் கணவரும், ராஜ்குமார்(கொழும்பு), சிறாந்தினி (பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி இமாகுலேட்டின் (ஆசிரியை, ஜிலான் மத்திய கல்லூரி, பாணந்துறை) மாமனாரும் எவ்லின் துஷானி, ஜலின் இஷானி, ஸி.ஆர். கிறிஸ்ரோதுமேஸ் ஆகியோரின் பேரனும், யோசப் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி), காலஞ்சென்ற ஸி.ஆர்.சேவியர், காலஞ்சென்ற சரோஜினி, மோட்ச சலாக்கினி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி நேற்று (27.11.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல்:-
பிள்ளைகள் ராஜ்குமார் - 0777550596
சிறாந்தினி - 0602219639.

*கரவெட்டி.*

25 வருட கால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்
விடுமுறை கால 12 நாள்கள் பயிற்சி
* கூந்தல் அலங்காரங்கள் * Facials * மண அலங்காரங்கள்
* நவீன முடிவெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல் கைகள், கால்கள், நகங்கள் அழகுபடுத்தல்
* பலவகையான சேலை உடுத்தும் முறைகள் * Fabric Painting * Saree Painting
* பூவேலை * கைவேலை * ஆரம்பத் தையல்
* சாறி பிளவுஸ்கள் * சுரிதார் மற்றும் சகலவிதமான உடைகளும் தைத்தல்
* Saree Works 25 நாள் பயிற்சி (சேலையில் முத்துக்கள், சீக்குயின்ஸ், Beads, [illegible] வேலை செய்தல்)
மேற்படி பயிற்சிகளுக்கு [illegible]
* சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.12.2008
* கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 08.12.2008
காலை 9.00 மணி
மேலும் விபரங்களை தினமும் பி.ப.2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
[illegible]

# வலி.மேற்கில் 751 குடும்பங்கள் இடம்பெயர்வு

சங்கானை, நவ.28

வலிகாமம் மேற்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 751 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 260 குடும்பங்களும், அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் 43 குடும்பங்களும், சுழிபுரம் ஐக்கிய சங்கப் பாடசாலையில் 69 குடும்பங்களும்-

அராலி வள்ளியம்மை வித்தியாலயத்தில் 42 குடும்பங்களும் அராலி முத்தமிழ் சனசமூக நிலையத்தில் 49 குடும்பங்களும் வட்டு.கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தில் 25 குடும்பங்களும் வட்டு.கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தில் 30 குடும்பங்களும்-

வட்டு.இந்துக் கல்லூரியில் 10 குடும்பங்களும் அராலி அ.மி.த.க. பாடசாலையில் 32 குடும்பங்களும் சங்கானை தும்புத் தொழிற்சாலையில் 19 குடும்பங்களும் அராலி அம்மன் கோயிலடி 77 குடும்பங்களும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தில் 22 குடும்பங்களும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளன.

அத்துடன் சங்கானை மேற்கு கிராமத்தில் மண் குடிசைகளில் தங்கியிருந்த 73 குடும்பங்கள் இடம்பெயர்ந்து உற்றார், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு சமைத்த உணவுகளை பிரதேச செயலகம் வழங்கியது. (202-29)

## வடமராட்சி வடக்கில் இடம்பெயர்ந்தவர்கள் பாதிப்பு

மந்திகை, நவ. 28

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள 6ஆயிரத்து 500பேர் அங்குள்ள 19இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகளை பிரதேச செயலர் அலுவலகம் வழங்கியது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுகக்குட்பட்ட பகுதியில் இடம்பெயர்ந்துள்ள 545 பேர் அப்பகுதியில் உள்ள 5தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகளை உதவி அரச அதிபர் அலுவலகம் வழங்கியது.

அழிப்பேரலையால் இடம்பெயர்ந்தவர்கள் வசித்து வந்த தற்காலிக கூடாரங்களும் காற்றில தூக்கி வீசப்பட்டன. அங்கிருந்து இடம் பெயர்ந்தவர்கள் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் தங்கியுள்ளனர்.

வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான 751 ஆம் இலக்க பஸ் சேவை மற்றும் பருத்தித்துறை-அம்பன் இடையிலான பஸ் சேவை என்பன ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

பெரும்பாலான பாடசாலைகளில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததனால் வகுப்பறை கட்டடங்கள் சேதமடைந்தன. பருத்தித்துறைப் பிரதேச சபைச் சந்தைப் பகுதியில் பாரிய மரங்கள் இரண்டு சாய்ந்ததால் அங்கிருந்த கடைகள் சிலவும் சேதமடைந்துள்ளன. (1)

## விமான சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமான சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளன என விமானச் சேவை வட்டாரங்கள் தெரிவித்தன.

வானிலை சீரில்லாத காரணத்தால் சிலதினங்களாகத் தடைப்பட்டிருந்த விமான சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளன என்றும் பயணிகள் தமது பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

# தீவக போக்குவரத்து நேற்றுப் பாதிப்பு

வண்ணை, நவ. 28

யாழ.பண்ணை ஊடாக தீவகத்திற்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு சந்தியில் இருந்து பண்ணைப் பெரும் பாலம் வரையான வீதியில் பல இடங்களில் போடப்பட்டிருந்த மத குக் குழாய்கள் சேதமடைந்திருப்பதாலே போக்குவரவு பாதிக்கப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதே வேளை அவசியப் போக்குவரவுகள் செய்பவர்கள் வள்ளங்களிலேயே பயணங்களை மேற்கொள்ள முடியும் எனவும் கூறப்படுகிறது. (160)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றொபின்சன் கிறிஸ்ரி புஸ்பராணி (பபா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி றொபின்சன் கிறிஸ்ரி புஸ்பராணி (பபா) 25.11.2008 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரை தம்பதியினரின் அன்பு மகளும், றொபின்சன் கிறிஸ்ரியோசப் (மனோகரன்) அவர்களின் பாசமிகு மனைவியும் பேணிற்றா (ஆசிரியை, ஹமீட் அல் குசைனியா கொழும்பு), ஜெனிற்றா (ஆசிரியை, இமையாணன் அ.த.க. வித்தியாலயம், வல்வெட்டித்துறை), அபிசேகன் (தொழில் நுட்பக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (29.11.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*85, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம். 0779116117*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை



கொக்குவில் மேற்கு, நாகலிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை நேற்று (27.11.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கையிலாயபிள்ளை - இரத்தினத்தின் அன்பு மகளும் குமாரலிங்கம், காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவரத்தினம், சரஸ்வதிதேவி (தேவி), தங்கராஜா (ஹொலண்ட்), புவனேந்திரன் (குட்டி, ஜேர்மன்), நடராஜா (அப்பன், கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன் (அத்தான்), ரஞ்சிதாதேவி, சிவகாமசுந்தரி, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் கௌரி, கௌசியா, அருண், மிதிலா, நிரோஜன், ஜெஸ்மினி, அச்சுதன், அகிலா, அரவிந்தன், அம்பிகா, சுதன், நிரோஜன், அனோஜன், வினோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சர்ஜனா, அனீஸ், அக்ஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,*
*கொக்குவில் மேற்கு.*

தகவல்:
க.ஸ்ரீதரன்
(அத்தான்).

### கந்தப்பிள்ளை கோபாலசிங்கம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் முன்னாள் தொழிநுட்பவியலாளரும் ராஜலக்சுமி ஸ்ரோர் முன்னாள் பங்காளரும் பிரபல வர்த்தகருமான கந்தப்பிள்ளை கோபாலசிங்கம் 27.11.2008 அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை-நாகம்மாவின் அன்பு மகனும், நீர் வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சரஸ்வதி யின் அன்புக் கணவரும், கனகராசா(வர்த்தகர், கொக்குவில்), காலஞ்சென்ற பரராசசிங்கம்(முன்னாள் புகையிரத ஹெட்காட்) மற்றும் சந்திரசேகரம்(முன்னாள் XRAY தொழில்நுட்ப விய லாளர், யாழ். போதனா வைத்தியசாலை,அவுஸ்ரேலியா) ஆகி யோரின் பாசமிகு சகோதரரும், ஜீவா(கனடா), ஜீவநந்தினி (லண்டன்), ஜீவசொருபி(சுவிஸ்), ஜீவசியாமினி (பிரதேச சபை, நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி (கனடா), றஜீந்திரன்(லண்டன்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), லோகேஸ்வரன் (இணுவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சஜீவன், கௌசிகன்(கனடா), கிருஷான், றொசானி (லண்டன்), மிதுர்ஷன், யதுர்சன்(சுவிஸ்), விலோசன், பிரியந்தன், ஹாரிணி (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2008) வெள்ளிக் கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல் :
மனைவி, மகள்
வே.லோகேஸ்வரன் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையில் தீவிரவாதிகள் 9 இடங்களில் தாக்குதல் துப்பாக்கிச் சூடு, குண்டுவெடிப்புகளில் 101 பேர் பலி!

## பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டோரை அதிரடியாக மீட்டது இராணுவம்

மும்பை, நவ.28

இந்தியாவின் வர்த்தகத் தலைநகராக விளங்கும் மும்பையில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து 9 இடங்களில் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டும், வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 101 பேர் பலியானார்கள். மேலும் 300 பேர் படுகாயம் அடைந்தனர்.

மும்பை நகரின் முக்கிய ரயில் நிலையமான சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் (சி.எஸ்.டி.)நேற்றுமுன்தினம் இரவில் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. இரவு 10.15 மணியளவில் முன்பதிவு பகுதி வழியாக ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் மற்றும் கையெறி குண்டுகளுடன் சில தீவிர வாதிகள் வந்தனர்.

பயணிகள் ஓய்வறைக்குள் நுழைந்த அவர்கள், கண்ணிமைக்கும் நேரத்தில் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித் தனமாகச் சுட்டனர். பின்னர் கையெறி குண்டுகளை வீசி விட்டுத் தப்பி ஓடி விட்டனர். இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிர் இழந்தனர்.

இதே நேரத்தில் நரிமன் பாயிண்டில் உள்ள ஓபராய் ஹோட்டலில் 2 தீவிரவாதிகள் அத்துமீறி நுழைய முயன்றனர். அங்கிருந்த காவலர்கள் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

உடனே ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் ஏ.கே. 47 ரக துப்பாக்கியால் ஹோட்டலின் அருகில் சென்றவர்கள் மீது சரமாரியாகச் சுட்டனர்.

கொலாபாவில் 'கேட்வே ஒவ் இந்தியா' பகுதியில் பிரபல தாஜ் ஹோட்டல் உள்ளது. இந்த ஹோட்டலுக்குள் சில தீவிர வாதிகள் அத்துமீறி நுழைய முயன்றனர். அந்த நேரத்தில் மராட்டிய அரசின் சுற்றுலா பொலிஸார் அங்கு நின்றிருந் தனர். பொலிஸாரை கண்டதும் தீவிரவாதிகள் அவர்கள் மீது கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் ஒரு பொலிஸ்காரர் ரத்த வெள்ளத்தில் சாய்ந்தார். பின்னர் தீவிரவாதிகள் ஹோட்ட லுக்குள் சரமாரியாக சுட்டனர்.

### தாஜ் ஹோட்டலில்

மும்பையிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான தாஜ் மற்றும் ஓபராய் ஹோட்டல்களில் சரமாரியான தாக்குதல் களை நடத்திய தீவிரவாதிகள், அதன் பின்னர் அந்த ஹோட்டல்களில் தங்கியிருந்த பெரும்பாலானவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர்.

அந்தக் ஹோட்டல்களை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் சுற்றி வளைத்த இந்திய இராணுவத்தின் விசேட கொமாண்டோ படைப்பிரிவினர் பணயக் கைதிகளை மீட்ப தற்காக தீவிரவாதிகளோடு போராடினர். இரு தரப்புகளுக்கும் இடையிலான கடும் துப்பாக்கிச் சண்டைக்குப் பின்னர் பண யக் கைதிகள் மீட்கப்பட்டனர். நேற்று நண்பகல் வரை அங்கு சண்டை நடந்தது. தீவிரவாதிகளுடனான மோதலில் கொமாண்டோ பிரிவைச் சேர்ந்த 800 இராணுவத்தினர் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை முதல் இரு ஹோட்டல் பகுதிகளிலும் பாரிய வெடிச்சத் தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

மும்பை தாஜ் ஹோட்டலில் 12 தீவிரவாதிகள் இருந்தனர். இவர்களில் ஐவர் கொல்லப்பட்டார். ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று மகா ராஷ்டிரா மாநிலத்தின் பிரதி முதலமைச்சர் கூறினார். ஏனையோருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

அந்தக் ஹோட்டலில் எத்தனை பேர் தங்கியிருந்தனர் என்ற விவரம் தெரியவரவில்லை. அங்கு அமெரிக்கர்கள், இஸ்ரேலியர்கள் மற்றும் கனடா நாட்டவர்கள் உட்பட பல வெளிநாட்டவர்களும் தங்கியிருந்தனர் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இரு ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் சிக்கியுள்ளவர்களில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்தனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. "இந்தியாவில் தடுத்து வைக் கப்பட்டுள்ள சகல முஜாஹிதீன்களும் விடுதலை செய்யப்பட வேண்டும். இந்தியாவில் வாழும் முஸ்லிம் களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படுத்தக்கூடாது" என ஓபராய் ஹோட்டலிருந்து தொலைபேசி மூலம் இந்திய தொலைக்காட்சியொன்றிற்கு தீவிரவாதியொருவர் நிபந் தனை விதித்தார்.

### முக்கிய பொலிஸ் அதிகாரிகள் கொலை

சுக்குலா என தன்னை அறிமுகப்படுத்திய அந்த நபர் குறிப்பிட்ட விடுதிக்குள் தமது சகாக்கள் ஏழு பேர் உள்ளனர் என குறிப்பிட்டுள்ளதுடன் இந்திய சிறைகளிலுள்ள அனைத்து இஸ்லாமிய தீவிரவாதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே தமது நிபந்தனை என்றும் சொன்னார்.

இந்தத் தாக்குதலில் மும்பை நகரின் முக்கிய பொலிஸ் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைவர் ஹெமன்ட் ஹாஹரே, மும்பாய் நகரின் மேலதிக பொலிஸ் ஆணையாளர் அசோக கம்டே ஆகியோரும் பலியாகியுள்ளனர் என்று நேற்று மாலை தகவல்கள் வெளிவந்தவண்ணமிருந்தன.

'லியோ போல்ட்' என்ற விடுதிக்குள் புகுந்த தீவிரவாதி கள், அந்த விடுதியின் உள்ளேயும், வெளியிலும் தீவிரவாதி களும் துப்பாக்கிகளால் சுட்டனர். மேலும் அந்த ஹோட்டலை ஒட்டி உள்ள சாலை, கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீதும் அவர்கள் சுட்டனர்.

அதேசமயம் கொலாபாவில் உள்ள மும்பை மாநகராட்சி அலுவலகத்திலும் தீவிரவாதிகள் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். மாநகராட்சி அலுவலகத்தின் முன்னால் குண்டு வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.

### விமானநிலையத்தில் குண்டுவெடிப்பு

சாந்தாகுருஸ் விமான நிலையம் அருகில் ஒரு காரில் திடீரென குண்டு வெடித்தது. இதில் 5 பேர் உடல் சிதறிப் பலியானார்கள்.இது நடந்த சில விநாடிகளில் வில்லே பார் லேயில் மேம்பாலத்துக்கு அடியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரிலும், டாக்யார்ட் வீதி பகுதியில் குண்டுகள் வெடித்தன. டாக்யார்ட் வீதி பகுதியில் காரில் குண்டு வெடித்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

மொத்தம் 9 இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

தீவிரவாதிகள் ஒரே நேரத்தில் நடத்திய இந்த தாக்குதல் களில், 100 பேர் பலியானார்கள்.

இந்த தாக்குதல்களில் 200 பேர் படுகாயமடைந்தனர், இவர்களில் ஒரு வெளிநாட்டு பயணியும், ஒரு பொலிஸ் அதிகாரியும் அடங்குவர்.

சி.எஸ்.டி. ரயில் நிலையத்தின் வெளியில் தீவிரவாதிகள் சுட்டதில் பலர் காயம் அடைந்தனர். இதனால் அங்கு தரை யில் ஆங்காங்கே இரத்தம் காணப்பட்டது. லியோ போல்ட் விடுதி மற்றும் அதை ஒட்டியுள்ள வீதி முழுவதிலும் இரத் தக்கறை படிந்திருந்தது.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய போது ஓபராய் ஹோட் டலில் தீப்பிடித்தது. உடனே தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். ஹோட்டலில் இருந்தவர்கள் அனை வரும் ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டனர்.



மராட்டிய சட்டசபை கட்டடத்துக்கு முன்பும் துப்பாக்கிச் சூடு நடந்ததாக தகவல் வெளியானது.


2 தீவிரவாதிகள் பொலிஸ் வானில் தப்பி ஓடினர் எனவும், 2 பேர் பிடிபட்டனர் என்றும் கூறப்படுகிறது.

தீவிரவாதிகளைப் பிடிக்க பொலிஸாருக்கு உதவியாக இராணுவமும் வரவழைக்கப்பட்டது. டில்லியில் [illegible] சிறப்பு கொமாண்டோ படையினரும் மும்பைக்கு [illegible] தனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து மும்பையில் ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து உடனடியாக நிறுத்தப் பட்டது. துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டு, 'சீல்' வைக்கப்பட்டது. நகரம் முழுவதும் பதற்றம் நீடிக்கிறது. மராட்டிய மாநிலம் முழுவதும் [illegible] படுத்தப்பட்டுள்ளது. டில்லியிலும் பாதுகாப்பு [illegible] தப் பட்டது.

மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியமை பற் றிய தகவல் கிடைத்ததும் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி பிரதமர் மன்மோகன் சிங்கைத் தொடர்பு கொண்டு பேசினார்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்
### வெளிவாரிப் பரீட்சைகளைப் பிற்போடுதல்
### கலைமாணி பகுதி I - 2005 & 2006

மேற்படி கலைமாணி பகுதி-I பரீட்சையில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

**பதில் பதிவாளர்.**

27.11.2008 (வி-555768)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி தேன்மொழி தவராசா

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த செல்வி தேன்மொழி தவராசா நேற்று (27.11.2008)வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சங்குவேலி வடக்கைச் சேர்ந்த தவராசா - சத்தியபாமா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் வதனமொழி (இத்தாலி), அனுசன் (யாழ்.பல்கலைக்கழகம்), வசந்தன் (யாழ். பல்கலைக்கழகம்), கனிமொழி(உடுவில் மகளிர் கல்லூரி, மாணவி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் தவக்குமாரின் (இத்தாலி) மைத்துனியும் காலஞ்சென்ற ஞானசேகரம், மங்கையர்க்கரசி தம்பதியரின் பேர்த்தியும் வசந்தி இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், சிந்மய பாரதி வித்தியாலயம்), கௌரியம்மா, நகுலேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் பாலச்சந்திரன், ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), தாட்சாயினி ஆகியோரின் மருமகளும் தாரணி, கபிலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.11.2008)வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் இணுவிலில் உள்ள அவரின் பேர்த்தியாரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில். (80167)

தகவல்:
**ஞான.திருக்கேதீஸ்வரன்** (மாமன்)
(ஆசிரியர்,யாழ். மத்திய கல்லூரி, )

### திருமதி அன்னம்மா தாவீது (அஞ்சலீனா)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தாவீது (அஞ்சலீனா) 26.11.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அற்புதம் தாவீதுவினது அன்பு மனைவியும் ஜோசேப், பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பிரான்சிஸ் குணரட்ணம் (இ.போ.ச), திருச்செல்வம், இராசேஸ்வரி, பேரின்பநாதன் (இ.மி.ச, வவுனியா, யாழ்ப்பாணம்), செல்வராசா, தங்கராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானமலர், விக்டோறியா, யோசேப்(இ.போ.ச), சறோஜினிதேவி, பற்பராணி, புவனேஸ்வரி(ஜேர்மனி), கடம்பேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனார்த்தனன்(சுவிஸ்), யூட், ஜெனிஸ்ரா, டொன்லூயிஸ்(பிரான்ஸ்), ஜெயானி, சுதர்சினி, பற்றிக்குறுஸ், பிறின்சி, சாள்ஸ் குருஸ் (சிங்கப்பூர்) கமிலஸ் (பிரான்ஸ்), கோபிதாஸ்(பிரான்ஸ்), ஜெயதாஸ்(பிரான்ஸ்), லியோனா(லண்டன்), யூடினா(உடுவில் மகளிர் கல்லூரி), யசோபா(பிரான்ஸ்), சுதாகரன்(வவுனியா), கிருபாகரன், சுபாஸ்கரன், நிலோபா, சினோபா, ஜெனிபா(சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சுரேந்திரராஜ், பகிர்தரன், ராஜ்குமார், பத்மசீலி (யா/மருதனார்மட விவசாயக் கல்லூரி), சுமி(ஜேர்மனி), ரதி(ஜேர்மனி), பிரசன்னா(ஜேர்மனி), நிக்ஷன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.11.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (80161)

தகவல்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

### பாலர் பாக்கியம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், புதுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலர் பாக்கியம் (26.11.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலுவின் அன்பு மனைவியும் யோகம்மா, செல்வராசா, யோகநாதன் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்திலிங்கம்(மணியம்), இந்திராணி, யாமினி (பிரான்ஸ்), சுரேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், வஜிகரன் (கனடா), ஜெய கௌரி(ஜேர்மனி), கீர்த்திகா, வர்ஷிகா, சிந்துகா, சதீஸ்வரன் (டோகா), குணசீலன், கஜனி, பிரதீசன்,யஸ்விகா, சூபீக்கா, றனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெனிஸ், நியோராவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (27.11.2008) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது மடத்தடி,
மானிப்பாய். (80050)

தகவல் :
மருமகன்: வைத்திலிங்கம்
(மானிப்பாய்).

## பிற்போடப்பட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.28

மக்கள் வங்கியின் நெல்லியடிக் கிளையினர் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை நடத்தவிருந்த கல்விக் கௌரவிப்பு விழா பிற்போடப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,நவ.28

வடமராட்சி ஆங்கில மொழி வளப் பயிற்சி மையத்தினரால் நாளை சனிக்கிழமை வடமராட்சி இந்து மகளிர் பாடசாலைகளில் நடத்தவிருந்த பரிசளிப்பு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த சமய அறிவுப் போட்டிகள் தற்போதைய சூழ்நிலை காரணமாக கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சைவ சமய விவகாரக் குழு வின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்தார். (111)

* * *

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்.செயலக பதிவாளர் பிரிவினரால் இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சியில் நடத்தப்படவிருந்த நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

* * *

யாழ்ப்பாணம்,நவ.28

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் 2009ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி படிவங்கள் திறக்கும் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. கேள்வி படிவங்கள் திறக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்- என பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (1)

## வடமராட்சியில் பதிவு செய்ய அறிவுறுத்து

வடமராட்சி, நவ. 28

கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக வடமராட்சிப் பிரதேசத்தில் சேதமடைந்த பாடசாலைகளின் விவரங்களை இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்துள்ளார். (203-236)

## கதிர்வீச்சு சிகிச்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 28

தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் கடந்த இரண்டு நாள்களாக நடைபெறாது தடைப்பட்டிருந்த கதிர்வீச்சுச் சிகிச்சைகள் இன்று தொடக்கம் நடைபெறும் என்று டாக்டர் என்.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (1-203)


**புதிய உயர் கல்லூரி**

எதிர்வரும் சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறமாட்டா.
06.12.2008 அன்று வழமையான வகுப்புக்கள் அனைத்தும் நடைபெறும்.
நிர்வாகி: எஸ்.அருள்நங்கை
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.


**தவறிவிட்டது** 5ஆம் குறுக்குத் தெரு, உதயபுரம், மணியந்தோட்டம் என்னும் முகவரியுடைய யேசுதாசன் சுஜீவன் பிரகாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (893383359OV), விசேட அடையாள அட்டை மற்றும் பாடசாலை அடையாள அட்டை ஆகியன கடந்த 25.11.2008 செவ்வாய்க்கிழமை இராசாவின் வீதிக்கும் ரெம்பிள் வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கப்ரன் D.A.M குணசிங்கம் J.P 61,ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தவறிவிட்டது** கிராமசேவையாளர் பிரிவு J/152 மாதகல் மேற்குக்குரிய கிராமசேவையாளரின் காரியாலய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிறப்பை (Office Bag) 26.11.2008 அன்று மானிப்பாய்க்கும் குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் [illegible] பிரதேச செயலகம் அல்லது J/152மாதகல் மேற்கு கிராம சேவையாளர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து நாகலிங்கம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து நாகலிங்கம் (24.11.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து- தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும் றோசம்மா, முத்துமாலை, அமரர் வாலமுத்து ஆகியோரின் சகோதரரும், கோகுலராணி,விஜயராசா (லண்டன்), தவகுலராணி, பத்மராசா(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்.), நாகராசா (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் ஜெயகுலரதி(லண்டன்), அன்னலிங்கம், குகனேஸ்வரி, விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜன், மிதுஷா, சர்ஜன், மிருசிகா(லண்டன்), சுதுமில்சன், அனோஸ் அடெம்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
அராலி. (80163)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி திலகவதி நவரத்தினராஜா (சங்கானை)

சங்கானை பிரதான் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவ்தி நவரத்தினராஜா (25.11.2008) செவ்வாயன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் நவரத்தினராஜாவின் (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சிவயோகராஜா (ஜேர்மனி), கலாவதி(திருகோணமலை), மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரி(ஜேர்மனி),ஜீவானந்தன் (திருகோணமலை) ஆகியோரின் மாமியாரும், கஜீபன் (திரு கோணமலை), திலக்(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியாரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 26.11.2008 புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி, சங்கானை.
தொ.பே: 0776010508 (வி-555766)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை
(நாரந்தனை வடக்கு)



நாரந்தனையைப் பிறப்பிடமாக்வும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் 22.11.2008 அன்று இறைபதமெய்தினார்.

அன்னார் திருநெல்வேலி, கரம்பன் மற்றும் நாரந்தனையில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய காலஞ்சென்ற பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பா- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் பராசக்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனடாவில் வசிக்கும் திலகவதி, சத்தியானந்தன், சரோஜினிதேவி, தியாகலிங்கம், கேதீஸ்வரன், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் விஜயநாதன், சபாநாதன், லிங்கநாதன், இங்கிலாந்தில் வசிக்கும் சிவகுமாரன், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கலாதேவி அவர்களின் அன்புத் தாயாரும், செல்வராஜ்(கனடா), சுந்தரி, குமாரவேல், மைதிலி, தேவி, சாந்தினி (அவுஸ்திரேலியா) கலாநிதி, நந்தினி, ராகினி (இங்கிலாந்து), சகாதேவன்(கிராமசேவகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனந்தன் - பிரியா(கனடா), காலஞ்சென்ற ரிஷிகேசன், அனுஷியா - அஜந்தா, தர்ஷா, கவாஷ், அனித்தா, அரங்கன், சாரங்கன், பமிலா, சிவகஜன் (அவுஸ்திரேலியா), நித்திலா, தனுஷா, தர்ஷிகா, அபிராமி, ரமணன், அச்சுதன் - ஷோபனா(இங்கிலாந்து), பெனோ, தனுஷன், மைதிலி - சுரவிந்(அமெரிக்கா), தேனுதயா (யாழ்ப்பாணம்), தேனுஷா, கஜதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபினேஷ், அஜித்தின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 'Midland & Sheppard' சந்திப்பில் அமைந்திருக்கும் 'Ogdan Funeral Home'இல் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியிலிருந்து 9 மணி வரையும், மறுநாள் நவம்பர் மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 10 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு 11 மணியிலிருந்து 1 மணிவரை "Mount Pleasant' Cemetaryஇல் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
**பிள்ளைகள், மருமக்கள்**
**(க.சகாதேவன், யாழ்ப்பாணம்)**

### மலக்கியாஸ் எட்வேட்



குருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மலக்கியாஸ் எட்வேட் 26.11.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலக்கியாஸ் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிரான்சிக்கம்மாவின் பாசமிகு கணவனும், காலஞ்சென்றவர்களான மோசேஸ் - தோக்கிள்ளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தி, றதினி, ஜெனிற்றா(ஜேர்மனி), எமில்யான்சன், மரினா, எமல் யோன்சன்(பிரான்ஸ்), நிக்கொலின்னா, சிந்து ஆகியோரின் அன்புத் தந்தையும் தமஸ்சின், யோகதாஸ், அமலதாஸ், குமாரி, கனிசியஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் அடிலஸ் (ஜேர்மனி), எரிக்(ஜேர்மனி),கமன்சி, தபேசன், வீஜிலியன், அலக்சியா, விதுஷன், ஸ்ரெபானி, எடின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, ஜஸ்பிளாட் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (80160)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் காற்றுடன் கூடிய கனமழையின் தாக்கத்தின் பதிவுகள்.....



திருநெல்வேலி சிவன் வீதியில் வெள்ளத்தில் வளர்ப்புப் பிராணியுடன்.....



வெள்ளத்தில் இடம் பெயரும் மக்கள்....



வேரோடு வீழ்ந்திருக்கும் பாரிய மரம்



நாவலர் வீதியின் குறுக்காக சரிந்திருக்கும் மரங்கள்...



யாழ்.நகர பஸ் நிலையம்...



நாவலர் வீதியில் புகையிரத நிலையப்பகுதியில் அரச மரம் வீதியின் குறுக்கே...



யாழ்.வைத்தியசாலையின் பிரசவ விடுதி...



யாழ்.வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவு...



யாழ்.இந்துக் கல்லூரியில் தங்கியுள்ள அகதிகள்...

## யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் மழைவெள்ளம்: செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

நல்லூர், நவ.28

குடாநாட்டில் பெய்த அடைமழையினால் யாழ்.போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளில் ஸ்தம்பித்த நிலை ஏற்பட்டுள்ளது.

பிரசவ விடுதி, இருதய சிகிச்சைப் பிரிவு ஆகிய பகுதிகள் ஒரு அடிக்கு மேலாக வெள்ளம் புகுந்து காட்சியளிக்கிறது.

பிரசவ விடுதியின் கீழ் பகுதியில் தங்கியிருந்தவர்கள் மேல்பகுதிக்கு உடனடியாகவே மாற்றப்பட்டனர்.

ஆஸ்பத்திரிக்கான குடி தண்ணீர் கிணற்றுக்கு மேலாக வெள்ளம் மேவி நிற்பதால் குடி தண்ணீர் பாவிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

திருநெல்வேலியில் இருந்து தேவையான குடிதண்ணீரையாவது பெற்றுத் தருமாறும் வைத்தியசாலையில் தேங்கி நிற்கும் வெள்ளநீரை வெளியேற்றுவதற்கு உதவுமாறும் யாழ்.மாநகர சபையுடன் தொடர்பு கொண்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரியின் பல பகுதிகளில் மழை ஒழுக்கு காரணமாக நிலங்கள் ஈரமாகிக் காணப்படுகின்றது.

மழை வெள்ளம் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதியில் காணப்பட்ட பெரிய மரங்கள் விழுந்தும் முறிந்தும் கிடப்பதாலும் அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளன. (203-111)

## சமய அறிவுப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடத்தப்படவிருந்த 10 [illegible]மான சமய அறிவுப் பரீட்சை, தொடர் மழை மற்றும் புயற்காற்று காரணமாக மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுக்கு சைவ விவகாரக்குழு அறிவித்துள்ளது. (203)

## யாழ்-மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கு 'கலாபூசணம்' விருது

யாழ்பாணம், நவ.28

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கு இவ்வருடம் கலாபூசணம் விருது வழங்கப்படவுள்ளது.

கலை இலக்கியத்துறைகளில் அரும் பணிபுரிவோருக்காக கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வருடந்தோறும் 'கலாபூசணம்' விருது வழங்கி வருகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு ஆனந்தக் குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் 'கலாபூசணம்' விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து விருதுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

விஸ்வநாதர் தம்பிராசா ஆச்சாரியார் (வட்டுக்கோட்டை-சிற்பக்கலை), கதிர்காமு தம்பையா-புலோலியூர்.(க.தம்பையா) (புலோலி- இலக்கியத்துறை), பெரியசாமி பாலகிருஷ்ணன் (அளவெட்டி-இசைத்துறை-நாதஸ்வரம்), நாகலிங்கம் புவனசுந்தரம் (வட்டுக்கோட்டை- நாட்டுக்கூத்து) வைரமுத்து கந்தசாமி (வரணி- நாடகத்துறை)

செல்வி சரோஜா தம்பு(கரவெட்டி- இசைத்துறை), வேலுப்பிள்ளை பஞ்சாட்சரவேல்( வட்டுக்கோட்டை-கலைத்துறை), தம்பிப்பிள்ளை யோகநாதன் (சங்கானை- ஓவியத்துறை), இரத்தினம் மார்க்கண்டு (நல்லூர்- இசைத்துறை- தவில்) செல்லையா சிவசாமி (யாழ்ப்பாணம் -சங்கீதம்-நாதஸ்வரம்), மாரிமுத்து சிதம்பரநாதன் (சுழிபுரம்- இசை- மிருந்தங்கம்), பொன்னையா சண்முகநாதன்(சுன்னாகம்- இலக்கியம்-மொழித்துறை)

இவர்கள் போக்குவரத்து தொடர்பான விவரங்களை அறிய மேலதிக அரச அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (203)

## இலங்கை அதிபர் சேவை பதவி நியமன ஒழுங்குகள்

அச்சுவேலி, நவ.28

இலங்கை அதிபர் தரம் 2:II பதவி நியமனம் தொடர்பாகச் சில திட்டமிட்ட ஒழுங்கு முறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தேசியப் பாடசாலைகளில் இந்து அதிபர் சேவை தரம் 2:II க்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தேசியப் பாடசாலைகளிலேயே பதவிப் பொறுப்புகள் வழங்கப் படவுள்ளன.

*தேசிய பாடசாலைகளின் அதிபர் பொறுப்புகள் தவிர்ந்த உதவி அதிபர் பதவி, பகுதித் தலைவர் பதவியில் என்பனவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு முகாமைத்துவப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.

*மாகாணப் பாடசாலைகளில் இருந்து அதிபர் பதவி உயர்வு பெறுபவர்களுக்கு மாகாணப் பாடசாலைகளில் பதவிப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன. பதவித் தரத்துக்கு ஏற்ற வகையில் உரிய தர நிலையில் உள்ள பாடசாலைகளில் கடமைப் பொறுப்புகளை ஏற்பதற்கான ஏற்பாடுகளை மாகாணக்கல்வி அமைச்சுகள் மேற்கொண்டு வருகின்றன.

*பதவி உயர்வுகள் பெற்றவர்களுக்குப் பாடசாலைகள் வழங்கப்படும்போது நீண்ட காலமாக பதில் அதிபர்களாக கடமைபுரிந்து கொண்டிருப்பவர்களின் பதவிகளை பாதிக்காத வகையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பாடசாலைகள் வழங்கப்படவுள்ளன.

*குறித்த காலத்துக்கு மேல் பதில் அதிபர்களாக இருப்பவர்களின் பதவியை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளார். (202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவலைகள்

| உருவத்தில் | உள்ளத்தில் |
|---|---|
| 27 | 10 |
| 01 | 12 |
| 1925 | 2007 |



## அமரர் தம்பு கந்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: பிரதமை (28.11.2008)

*கண்ணீரில் கரைந்தது ஆண்டு ஒன்று!*
*கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு*
*உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்*
*உங்கள் நினைவுகளே எம்மை ஆளுகின்றன*
*இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்*
*இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே சென்றீர்கள்*
*எம் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்!*

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

(சி/555753)

# கேள்வி அறிவித்தல்

**சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் மின்பிறப்பாக்கிகள் வைப்பதற்கான அத்திவாரம் (Foundation) மற்றும் ஏனைய குடிசார் வேலைகளை (Civil Works) நிறைவேற்றல்**

**இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம் (வடமாகாணம்)**

மேல் குறிப்பிடப்பட்ட வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender) 2008.12.11ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) மாகாண கொள்வனவுக் குழுத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 1000.00 (ஆயிரம்) இற்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று வங்கியில் பணத்தினைச் செலுத்துவதன்மூலம் அல்லது *பொதுமுகா மையாளர், இலங்கை மின்சார சபை,* கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக் கட்டளையாகவோ சமர்ப்பித்து, *இல.500, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்* என்னும் விலாசத்திலுள்ள பிரதிப் பொதுமுகா மையாளர் (வடமாகாணம்) அலுவலகத்தில் 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதிவரை வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 11.12.2008 பிற்பகல் 2 மணிக்குப் *பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சார சபை, 500, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்* அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப்பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் (Duplicate) பூர்த்திசெய்து, கடித உறையிலிட்டு, அதன் இடது பக்க மேல்மூலை யில் *"சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் மின்பிறப்பாக்கி வைப்பதற்கான அத்திவாரம் (Foundation) மற்றும் ஏனைய குடிசார் வேலை களை (Civil Works) நிறைவேற்றுவதற்கான கேள்வி"* எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 11.12.2008ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். இந்த அறிவித்தல் தொடர்பான மேலதிக விவரங்களைக் கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் உள்ள பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

*மாகாண கொள்வனவுக் குழு*
*(வடமாகாணம்),*
*பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்,*
*இலங்கை மின்சார சபை,*
*இல. 500, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல:* 021 222 2496,
021 222 3233
*தொலைநகல் இல:* 021 222 2497

*தலைவர்*
*மாகாண கொள்வனவுக் குழு,*
*(வடமாகாணம்).*

"சூழல் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(சி/555758)

## கோதுமை மா விநியோகம்

கோப்பாய்,நவ.28
நீர்வேலி ப.நோ. கூ. சங்க எல்லைப் பரப்பின் கீழுள்ள கூட்டுறவுக் கிளைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு கோதுமை மா கிலோ 75 ரூபா வீதம் 5 கிலோ வழங்கப்பட்டு வருகிறது.
(203-72)

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லமுத்து முத்தையா



இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நல்லமுத்து முத்தையா அவர்கள் நேற்று (27.11.2008) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் பாலசுப்ரமணியம், கனகாம்பிகை, கமலா, தர்மபூபதி, மனோரஞ்சிதம், பத்மநாதன், நீலாவதி, பாலகிருஷ்ணன், தவ மலர், காலஞ்சென்ற நடேசலிங்கம் மற்றும் தவராணி ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர், சந்திரசேகரம், சண்முகரத்தினம், காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோரஞ்சிதம், ஜெயலட்சுமி, துரைவீரசிங்கம், குமுதினி, செல்வநாயகம், சிவானந்தம் (சிவா பிறதர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல.: 021 222 6805,
077 9116045
இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
ந.புஸ்பராசா (புஸ்பா),
செ.ரஞ்சிதகுமார் (ஒப்பன் ஆங்கில நிறுவனர்),
பேரப்பிள்ளைகள்.

(80157)

# மரண அறிவித்தல்

## அம்புறோஸ் யோசப் செல்வரட்ணம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கைதடி நுணாவில், சாவகச்சேரியை வதிவிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசிப்பவருமான அம்புறோஸ் யோசப் செல்வரட்ணம் (20.11.2008) அன்று பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் றோஸ் தனலஷ்சுமியின் அன்புக் கணவரும் றெஜீனா உதயமலர், அன்ரனி ஜீவராஜ், யோண் தவராஜ் அருட்தந்தை எட்வின் வசந்தராஜ் (அ.ம.தி), யசிந்தா, ஜெயந்திமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசீலன், சுசிலா, அஞ்சலீனா, றோய் எட்வேட் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் எட்லின், எடிசன், ஜெறோமி, டிறோன், நிர்சன், அடோசன், அடோசலீன் ரோணி முறி, டாணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரான்ஸ்.*
(80159)

*தகவல்:*
அருட்தந்தை
எட்வின் வசந்தராஜ் (அ.ம.தி).


# Become an IT Professional

**Obtain a World Class British Qualification**

BTEC edexcel INTERNATIONAL

பல நூறு மாணவர்கள் பயணித்த வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்.

A/L தகைமையுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியை பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதி செய்கின்றது. இக்கற்கை நெறிகளை பூர்த்திசெய்துகொள்ளும் மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வசதிகளை IIS City Campus ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கை நெறியினை தென்பகுதிக்கு சென்று, குறிப்பாக கொழும்பு சென்று கற்க வேண்டிய நிலையை முற்றாக மாற்றி பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே எமது சொந்தப்பிரதேசத்தில் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பினை எமது நிறுவனம் வழங்குகின்றது.

**HND**
in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)

*Delivered locally......*
*Recognized globally......*

Applications for the January 2009 intake are now open

Application accepted with pending A/L results

B.Sc.(Hons) — 1 Year at leading Universities in UK,USA,Australia,Canada etc — 3rd Year
↑
BTEC HND — Computing (General) / Computing (ICT System Support) Computing (Software Development) — 2nd Year
↑
BTEC HNC — Computing — 1st Year
↑
G.C.E A/L with 2 Subjects



Edexcel International 'A' rated centre for the 4th consecutive year

# IIS CITY CAMPUS

Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
E-mail: iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜரட்ணம் புவனேஸ்வரி

கீரிப்பல்லி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் புவனேஸ்வரி 25.11.2008 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லையா இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)இன் அன்பு மனைவியும் ஸ்ரீதரன் (இயந்திரவியல் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), பாஸ்கரன் (காசாளர், வாழைச்சேனைப் பிரதேச செயலகம்), முரளிதரன் (அபிவிருத்தி உதவியாளர், சாவகச்சேரி பிரதேச செயலகம்), வித்தியா (விவசாயப் பரிசோதகர், பொலனறுவை), கோணேஸ்வரன் (தேர்தல் திணைக்களம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற புஸ்பாதேவி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் மேனகா (சமுர்த்தி முகாமையாளர்), தனுஷியா (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சமன் ஆகியோரின் அன்பு மாமியும் புஸ்பகரன், ஹரீஸ், அபியங்கா, அபிஷேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கீரிப்பல்லி,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (சி/555764)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதி செய்யுமா பிரிட்டன்?

ஈழத் தமிழர்களுக்கு எதிராக வரலாற்று ரீதியாகத் தன்னால் இழைக்கப்பட்ட பெரும் அநீதிக்காக அவர்களுக்கு நீதியும், நியாயமும், நிவாரணமும் பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் பிரிட்டனுக்கு - அதன் நாடாளுமன்றத்துக்கு - உள்ளது.

- இப்படி பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்துப் பலமாகக் குரல் கொடுத்திருக்கின்றார் தமிழகத்தின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ.

தமிழர்களுக்கான பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிக் குழுவின் முன்னால் உரையாற்றுகையிலேயே, ஈழத் தமிழர்களுக்கு பிரிட்டன் இழைத்த பெரும் தவறை சூடாக எடுத்துரைத்து, அந்தத் தவறினால் ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்துள்ள அவலத்திலிருந்து அவர்களை மீட்டு அவர்களுக்கு உரிய மீட்சி பெற்றுக்கொடுக்கும் பொறுப்பும், கடமையும் பிரிட்டனுக்கு உண்டு என்று அழுத்தம் கொடுத்திருக்கின்றார் வைகோ.

இலங்கையில் தமிழர்கள் இன்று படும் அவலங்களுக்கும், இன்னல்களுக்கும் பிரிட்டனே காரணம் என்ற குற்றச்சாட்டைப் புரிந்து கொள்வதற்கு இலங்கைத் தீவின் சரித்திரப் பின்புலத்தை சற்று நோக்குவது அவசியமானதாகும்.

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இலங்கைத் தீவில் போர்த்துக்கேயர்கள் முதன் முதலில் வந்து இறங்கியபோது இங்கு பாரம்பரியமான - புராதன - அரசுகள் இரண்டு இருப்பதைக் கண்டார்கள். வடக்கு, கிழக்கில் தமிழர்களும் தெற்கில் சிங்களவர்களும் வெவ்வேறான பண்பாடுகளோடு, வேறுபட்ட இரண்டு சமூகங்களாக, தமக்கென தனித்துவமான மொழி, வாழிடம், வாழ்க்கைமுறை, வழக்காறு ஆகியவற்றோடு கூடிய தனித்தனி ஆட்சியமைப்புகளின் கீழ் வாழ்ந்து வருகின்றமையை அவர்கள் கண்ணுற்றனர்.

1619 இல் தமிழர் இராச்சியத்தைப் போர்மூலம் போர்த்துக்கேயர் தோற்கடித்துக் கைப்பற்றினர். எனினும், போர்த்துக்கேயரும் சரி, அதன் பின்னர் இலங்கைத் தீவை ஆக்கிரமித்த ஒல்லாந்தரும் சரி, தமிழர் தேசத்தை தனி இராச்சியமாக ஆண்டு, அதன் பிரதேச ஒருமைப்பாட்டைத் தனித்துவமாகப்பேணி, ஈழத் தமிழரின் இன அடையாளத்தையும் அங்கீகரித்தே வந்துள்ளனர்.

ஆனால், 1799 இல் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கைத் தீவின் ஆட்சிக் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய பிரிட்டிஷ் சாம்ராச்சியம், தனது நிர்வாக வசதிக்காக இந்த இரண்டு இராச்சியங்களையும் இணைத்தது. இரண்டு தனித்துவ இன அடையாளங்களோடு இருந்த இரு தேசக் கட்டமைப்புகளை, அவற்றின் தனித்துவச் சிறப்பைப் பொருட்படுத்தாது புறமொதுக்கி, உதாசீனம் செய்துவிட்டு, 1833 இல் இரு தேசங்களையும் ஒன்றாக்கி, ஒற்றையாட்சிக் கட்டமைப்பைத் திணித்தது பிரிட்டிஷ் சாம்ராச்சியம்.

சிறுபான்மையினரான தமிழர்களின் தேசத்தையும், பெரும்பான்மையினரான சிங்களவரின் தேசத்தையும் ஒன்றாக்கி, ஒரே அரசுக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்த பிரிட்டிஷார், தாம் இந்த இலங்கைத் தீவை விட்டுப் புறப்பட்டுச் செல்லவேண்டிய வேளை வந்த சமயத்தில், தமிழர் தேசத்தின் காலாதிகால இறைமையை, பெரும்பான்மையினரான சிங்களவர்களின் கையில் அடிமைத்துவமாக ஒப்படைத்துவிட்டு வெளியேறினர்.

அந்நிய குடியேற்றவாதம் அன்று அடித்தளமிட்ட அந்த இன அடிமைப்படுத்தலுக்கான ஏற்பாடே இன்று இலங்கைத் தீவில் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் இவ்வளவு தீவிரமாக - பெரும் வன்முறைப் புயலாக - வீசுவதற்கான காரணமாக அமைந்தது.

பிரிட்டனின் தற்போதைய எம்.பிக்களுக்கு இந்த வரலாற்றுப் பின்புலத்தை எடுத்து விளக்கிய வைகோ, இலங்கையின் இனப்பூசல் இத்தகைய மோசமான கட்டத்தை எட்டுவதற்கான கருவை உற்பவித்தது பிரிட்டனே என்ற உண்மையையும் அங்கே ஆணித்தரமாக - சரித்திர நிகழ்வுகள் பற்றிய தகவல்கள், சான்றுகளோடு - எடுத்துரைத்திருக்கின்றார்.

பிரிட்டன் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறின் அடித்தளத்தில் நிமிர்ந்த பௌத்த - சிங்களப் பேரினவாத மனவமைப்புடன் கூடிய இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பு, தமிழர் தேசம் தொடர்பாகத் தொடர்ந்து மேற்கொண்டு வந்த அடக்குமுறைச் செயற்பாட்டையும் அங்கு நன்கு விவரித்திருக்கின்றார் வைகோ.

இலங்கைத் தீவின் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு அமைதி வழியிலும், சமரச முறையிலும், சமாதான நெறியிலும் தீர்வு காண காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளும், எத்தனங்களும் பேரினவாதத் திமிரினாலும், செருக்கினாலும் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டன என்பதையும் அங்கு விவரித்திருக்கிறார் வைகோ.

இந்தக் காரணங்களினால், ஈழத் தமிழருக்கு நீதியையும், நியாயத்தையும், கௌரவத்துடன் கூடிய வாழ்வியல் உரிமைகளையும் மீளப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமையும், பொறுப்பும் பிரிட்டனுக்கே உரியது என்றும் வைகோ தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

வைகோ சுட்டிக்காட்டிய விடயங்களின் பிரகாரம் ஈழத் தமிழருக்கு வரலாற்றுத் தவறிழைத்த பிரிட்டன், இனியாவது நீதி, நியாயம் கிடைக்க வழி செய்யுமா?

# யாழ்.குடாநாட்டில் பெய்த கனத்த மழையால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,நவ.28

குடாநாட்டில்செவ்வாய்க்கிழமைஇரவு பலத்த காற்றுடன் வீசிய கனமழையால் நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இடம் பெயர்ந்து உறவினர்களின் வீடுகள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் போன்ற வற்றில் தங்கியுள்ளனர்.

**ஆனைக்கோட்டையில்...**

ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு 570 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கலைஒளி சனசமூக நிலையத்தில் 30 குடும்பங்களும், உயரப்புலம் அ.மி.த.க. பாடசாலையில் 90 குடும்பங்களும், ஆதவன் பாடசாலையில் 450 குடும்பங்களும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளன. இக் குடும்பங்களுக்குச் சமைத்த உணவுகளை கிராம சேவையாளர் வை.சந்திரராஜா வழங்கி வருகின்றார்.

**நவாலியில்....**

நவாலிப் பிரதேசத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுப் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இக் குடும்பங்கள் பாடசாலைகளிலும், ஆலயத்திலும் தங்கியுள்ளன.

**நாவாந்துறையில்...**

நாவாந்துறை நித்தியஒளி, வசந்தபுரம், சாயி நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 130 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

**நல்லூரில்...**

ஜே/103, கிராம சேவகர் பிரிவில் 110 குடும்பங்களும் ஜே/81, கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த ஒரு குடும்பமும் இடம்பெயர்ந்துள்ளன.

இப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களில் 650 பேர் யாழ்.இந்துக் கல்லூரியிலும் 534 பேர் இந்து மகளிர் கல்லூரியிலும் தங்கியுள்ளனர்.

தமது வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையால் அங்கு மீண்டும் சென்று வசிக்க முடியாத நிலை காணப்படுவதாக இவர்கள் தெரிவித்தனர்.

**காரைநகரில்....**

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஊரி, பிட்டி எல்லை, மருதபுரம், வியாவில், கல்லந்தாழ்வு போன்ற கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த 100 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் வியாவில் ஐயனார் ஆலய மண்டபம், வலந்தலை பொதுக் கட்டடம் ஆகியவற்றில் தங்கியுள்ளன.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்து 200 ஹெக்ரயர் வயல் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

**உடுவிலில்.....**

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு கம்பம் புலம் பகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளன.

ஊரெழு கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் ஊரெழுக் கலைவாணி முன்பள்ளியிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன.

**தென்மராட்சியில்....**

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு கிடைத்த தகவலின் படி இதுவரை சுமார் 14 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பிரதேசத்தில் பல இடங் களில் பயன்தரு மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளன.

பல வீடுகள் மீது மரங்கள் வீழ்ந்தும், வெள்ளம் புகுந்தும் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தினால் மூழ்கி நூற்றுக் கணக்கான ஆடுகளும், ஆயிரக்கணக்கான கோழிகளும் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் பாடசாலை, ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்குச் சமைத்த உணவுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில பகுதிகளில் வெள்ளம் அதிகரித்து வீடுகளில் இருந்து வெளியேற முடியாதநிலையில் சிக்கித் தவித்த மக்களைப் படையினர் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று விட்டதுடன் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொதிகளையும் வழங்கினர். அத்துடன் நேற்றுப் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கென அரிசி, பருப்பு ஆகியனவும் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்திற்கான சகல போக்கு வரத்து வீதிகளும் மழை வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளதால் பாடசாலைகள் இயங்கமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

**பண்ணைப் பாலம் சேதம்**

பண்ணைப் பாலம் சேதமடைந்துள்ளமையால் தீவுப் பகுதிக்கான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தீவுப் பகுதி மக்கள் யாழ். நகருக்குப் போக்குவரத்து மேற்கொள்ளப்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (203-111-100-207-150-250)

## சுகாதார சிற்றூழியர்களில் தகுதியுடையோர் முகாமைத்துவச் சேவையில் இணைப்பு

கொழும்பு,நவ.28

சுகாதார சேவையில் சிற்றூழியர்காளாகக் கடமையாற்றுபவர்கள் அரச முகாமைத்துவச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் சரத் சந்திரசிறி வித்தான இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது.

இக் கூட்டத்திலேயே அமைச்சின் மேலதிகச் செயலாளர் இத் தகவலைத் தெரிவித்தார். அரச முகாமைத்துவ சேவைக்கான பதவி உயர்வுப் பரீட்சைக்குத் தோற்றித் தகுதி பெற்றுள்ள சுகாதாரச் சிற்றூழியர்கள் முகாமைத்துவ சேவையில் இணைத்துக்கொள்ளப்படவில்லை என முறையிடப்பட்டிருந்தது.

அவர்களுக்கே இந்தப் பதவி உயர்வு இணைப்பு வழங்கப்படவுள்ளதாக மேலதிகச் செயலாளர் தெரிவித்தார். (202)

## பனை மரம் விழுந்ததில் மூதாட்டி உடல் நசிந்து பலி

யாழ்ப்பாணம், நவ.28

பனைமரம் முறிந்து வீட்டுக்குள் வீழ்ந்ததில் அங்கு படுத்திருந்த மூதாட்டி உடல் நசிந்து பலியானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டுவில் தெற்கு மருதங்குளம் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசலிங்கம் மாணிக்கம்(வயது 62) என்பவரே மரணமானவராவார்.

இதேவேளை வேப்பமரக் கிளை முறிந்து வீட்டின்மீது வீழ்ந்ததில் குடும்பப் பெண் காயமடைந்தார்.

கல்வயலில் இடம்பெற்ற இச் சம்பவ்தில் ஏ.யோகராணி (வயது 39) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)

## எரிபொருளுக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம்,நவ.28

குடாநாட்டில் பெய்த கனமழை காரணமாக மின்தடை ஏற்பட்டமை மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வெள்ளம் தேங்கியுள்ளமை காரணமாக நேற்று திடீரென எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்றபட்டது.



எரிபொருளுக்கு மக்கள் நேற்று அலைந்து திரிந்ததைக்காணக்கூடியதாக இருந்தது.

தனியார் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

எரிபொருளுக்கு யாழ்.நகரப் பகுதியில் கே.கே.எஸ்.வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக மக்கள் காத்து நிற்பதையே படத்தில் காண்கிறீர்கள். (203)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 14: 29.11.2008 | |
| | சனிக்கிழமை |
| திதி: | திதியை |
| | பி.இ.02.45 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | மு.ப.11.09 வரை |
| சுபநேரம்: | 03.14 - 04.44 |
| ராகுகாலம்: | 09.14 - 10.44 |

## வெள்ளத்தில் அள்ளுண்ட சிறுவனை படையினர் காப்பாற்றினர்

யாழ்ப்பாணம், நவ.28

மழை வெள்ளத்தில் அள்ளுண்டு சென்ற இரு பாடசாலை மாணவர்களைப் படையினர் நீந்திச் சென்று காப்பாற்றியதாக அறியப்படுகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலைக்குச் சென்ற தரம் ஒன்று மாணவர்கள் பெருங்குளம் சந்திக்கு அருகில் வீதியில் தேங்கிய வெள்ளத்தால் நடந்து சென்ற வேளையில் திடீரென வெள்ளம் இழுத்துச் சென்றதாகவும் - பிள்ளைகள் அபயக் குரல் எழுப்பியதைக் கண்ட படையினர் வெள்ளத்தில் நீந்திச் சென்று பிள்ளைகளைக் காப்பாற்றி முதலுதவி செய்த பின்னர் பெற்றோரிடம் ஒப்படைத்ததாகவும் கூறப்பட்டது. (203-207 )

## ஆனைக்கோட்டையில் இளைஞன் பலி!

நவாலி, நவ.28

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயக் குளத்தில் குளித்த இளைஞர் நீரில் மூழ்கிப் பலியானார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முள்ளியைச் சேர்ந்த அருமைத்துரை குமரன்(வயது 19) என்ற இளைஞரே பலியானவராவார்.

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த குறிப்பிட்ட இளைஞர் நீரில் மூழ்கிப் பரிதவித்துக் கொண்டிருந்ததைக் கண்ட இளைஞர்கள் சிலர் சேர்ந்து அவரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். (202-100)

## புதிய நியமனம்பெற்ற கிராம சேவகருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.மாவட்டத்தில் புதிய நியமனங்கள் பெறவுள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கூட்டங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிக்கு 127 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கு நாம் எப்போதும் தயார்; ஆனால் அரசு ஏமாற்று நாடகம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

### சிங்களத்தின் கனவுகள் நிச்சயம் கலையும்

எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது; தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது.

மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

### எனது அன்பான மக்களே!

என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது.

சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது. தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம்.

### தனித்து நின்று போராடுகிறோம்

இந்த நோக்கத்தைச் செயற்படுத்தி விடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப்படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது.

சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீராவேசத்தோடு போராடி வருகின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டுகொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப் பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

### நெருக்கடிகள் நிறைந்த வரலாற்றுப் பயணம்

இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம்.

எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம்.

பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதி வலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம்.

இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

### இந்த மண் எங்களின் சொந்த மண்

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண்; பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண்; வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண்.

இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள். எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம்.

ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட்டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது.

ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமை கோரி, தமிழ் மக்கள் தொடுத்த சாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது.

அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்த போதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது.

சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.

### சமாதானத்துக்கு எப்போதும் நாம் தயார்

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக் கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகாணவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர்.

அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை. சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுகளில் பங்குபற்றி வந்திருக்கிறோம்.

எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழு மனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுகள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக் கொடாத கடும்போக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

### அனைத்துலகத்தை ஏமாற்றவே பேச்சு நாடகம்

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பிய போதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம்.

போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுகளில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம். ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம்.

இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக்கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முகமூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுகளில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளையோ இனப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினைகளையோ தீர்ப்பவையாக அமையவில்லை.

புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுகளைப் பயன்படுத்தியது.

பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது.

பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

### சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவித்த உலக நாடுகளின் தடை

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தது.

எமது சுதந்திர இயக்கத்தை இந்நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்த காதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம் பெயர்ந்து வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன.

தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன.

இந்நாடுகளின் ஒரு பக்கச்சார்பான இந்த நடவடிக்கைகள்; பேச்சுகளில் நாம் வகித்த சம்நிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப் போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

### அனைத்துலக நாடுகளின் பாராமுகம்

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை; கவலை கூடத் தெரிவிக்கவில்லை.

மாறாக, சில உலகநாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன. இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது.

இன்று சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கைகொண்டு செயற்படுகிறது.

### தமிழினத்துக்கு எதிரான போர்

தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சிபுரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது.

இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று. இது தமிழருக்கு எதிரான போர்; தமிழ் இனத்திற்கு எதிரான போர்; தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர்; மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர்.

இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது. போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பளுவைச் சுமத்தி, மக்களைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகத் திருப்பிவிடலாம் என்ற நப்பாசையிற் சிங்கள அரசு செயற்பட்டு வருகிறது.

பாதைகளை மூடி, உணவையும் மருந்தையும் தடுத்து, எமது மக்களை இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுகளையும் நடத்தி வருகிறது.

சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அனைத்தையும் இழந்து, அகதிகளாக அலையும் அவலம் எம்மக்களுக்குச் சம்பவித்திருக்கிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை சதா துன்பச்சிலுவையைச் சுமக்கின்ற மக்களாக எம்மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நோயும் பிணியும் உடல்நலிந்த முதுமையும் சாவுமாக எம்மக்களது வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது.

### வரலாறு காணாத கொடூர அடக்குமுறை

எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது.

உலகில் எங்குமே நிகழாத கொடூரமான அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறது. எமது தேசத்தின் மீது ஒரு பெரும் பொருண்மியப்போரை தொடுத்து, எம்மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து அவர்களது நாளாந்த சீவியத்தைச் சீர்குலைக்கின்ற செயலிலே இறங்கியிருக்கிறது.

இலங்கைப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழ நிலப்பரப்பில் மாதந்தோறும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போகின்றனர்; கொல்லப்படுகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழர் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் பகுதிகளிலே ஒரு மறைமுகமான இன அழிப்புக் கொள்கை இன்று வேகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சாவும் அழிவும் இராணுவ அட்டூழியங்களும் சொந்த மண்ணிலேயே சிறைப்பட்ட வாழ்வுமாக எம்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக்கொடியது.

கைதுகளும் சிறை வைப்புக்களும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதுமாக ஒரு நச்சு வட்டத்திற்குள் எமது மக்களது வாழ்வு சுழல்கிறது.

### எமது மக்களின் விடுதலை வேட்கையை அழிக்க முடியாது

இருந்தபோதும், எமது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும் செய்துவிட முடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது.

எம்மக்கள் துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். அழிவுகளையும் இழப்புகளையும் நித்தம் சந்தித்து வாழ்பவர்கள். இதனால் அவர்களது இலட்சிய உறுதி மேலும் உரமாகியிருக்கிறது. விடுதலைக்கான வேகம் மேலும் வீச்சாகியிருக்கிறது.

பெரும் போருக்கு முகம் கொடுத்தவாறு, நாம் இத்தனை காலமாக இத்தனை தியாகங்களைப் புரிந்து போராடி வருவது எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நிம்மதியான வாழ்விற்கே அன்றி வேறெதற்காகவும் அன்று.

### எமது விடுதலைப் போராட்டம் எந்தவொரு நாட்டுக்கும் எதிரானதல்ல

உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பேராதரவோடு நாம் இந்தப் போராட்டத்தை நடாத்தி வருகிறோம். அதுமட்டுமன்று, எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.

எமது மக்களது ஆழமான அபிலாசைகளும் எந்தவொரு தேசத்தினதும் எந்த மக்களினதும் தேசிய நலன்களுக்குப் பங்கமாக அமையவில்லை. அத்தோடு இந்த நீண்ட போராட்ட வரலாற்றில், நாம் திட்டமிட்டு எந்தவொரு தேசத்திற்கு எதிராகவும் நடந்து கொண்டதுமில்லை.

### உலக நாடுகளுடனும் இந்தியாவுடனும் நட்புறவு கொள்ள விரும்புகிறோம்

எமது விடுதலை இயக்கமும் சரி எமது மக்களும் சரி என்றுமே உலக நாடுகளுடனும் எமது அண்டை நாடான இந்தியாவுடனும் நட்புறவை வளர்த்துச் செயற்படவே விரும்புகிறோம்.

இதற்கான புறநிலைகளை உருவாக்கி, நட்புறவுப் பாலத்தை வளர்த்துவிடவே சித்தமாக இருக்கிறோம். எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குக் காத்து நிற்கிறோம். எம்மை தடைசெய்துள்ள நாடுகள், எமது மக்களது அபிலாசைகளையும் ஆழமான விருப்பங்களையும் புரிந்துகொண்டு, எம்மீதான தடையை நீக்கி, எமது நீதியான போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

### இந்தியாவுடனான உறவுகளை புதுப்பிக்க விரும்புகிறோம்

இன்று இந்திய தேசத்திலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக்கிடந்த எமது போராட்ட ஆதரவுக்குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன.

எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற ஏதுநிலைகள் வெளிப்படுகின்றன.

(09 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பேரம் பேசும் சக்தியை அழித்து விட்டு சிங்களம் தீர்வை எப்படி முன்வைக்கப் போகின்றது



(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத் திற்கேற்ப, இந்தியப் போராட்டனான அறுந்து போன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறோம்.

அன்று, இந்தியா கைக்கொண்ட நிலைப் பாடுகளும் அணுகுமுறைகளும் தலையீடு களும் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட் டத்திற்கும் பாதகமாக அமைந்தன.

இனவாத சிங்கள அரசு தனது கபட நாட கங்களால் எமது விடுதலை இயக்கத்திற்கும் முன்னைய இந்திய ஆட்சிப்பீடத்திற்கும் இடையே பகைமையை வளர்த்து விட்டது.

இந்தப் பகைப்புலத்தில் எழுந்த முரண் பாடுகள் மேலும் முற்றிப் பெரும் போராக வெடித்தன. இதன் ஒட்டுமொத்த விளைவாக எமது மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்ற காரணத்தினால்தான் எமது இயக்கத்திற் கும் இந்திய அரசிற்கும் பிணக்கு ஏற்பட்டது.

எனினும், இந்தியாவை நாம் ஒருபோதும் பகை சக்தியாகக் கருதியதில்லை. இந்தி யாவை எமது நட்புச் சக்தியாகவே எமது மக் கள் என்றும் கருதுகிறார்கள். எமது தேசி யப் பிரச்சினை விடயத்தில் இந்தியப் பேர ரசு ஒரு சாதகமான நிலைப்பாட்டை எடுக் கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

**தமிழக உறவுக்கு நன்றி**

காலமும் கடல் கடந்த தூரமும் எம்மைப் பிரிந்து நிற்கின்ற போதும், எமது மக்களின் இதயத்துடிப்பை நன்கறிந்து, தமிழகம் இந்தவேளையிலே எமக்காக எழுச்சி கொண்டு நிற்பது தமிழீழ மக்கள் அனை வருக்கும் எமது விடுதலை இயக்கத்திற் கும் பெருத்த ஆறுதலையும் நம்பிக் கையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

எம்மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி, அன்புக்கரம் நீட்டும் தமிழக மக் களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் இந்தச் சந் தர்ப்பத்திலே எமது அன்பையும் நன்றியை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேநேரம், எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவாகக் குரலெழுப்புவதோடு, இந்தியாவிற்கும் எமது இயக்கத்திற்கும் இடையிலான நல் லுறவிற்குப் பெரும் இடைஞ்சலாக எழுந்து நிற்கும் எம்மீதான தடையை நீக்குவதற் கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு வேண்டிக்கொள் கிறேன்.

**எனது அன்பான மக்களே!**

சிங்கள அரசியல் உலகத்தில் பெரும் மாற்றங்களோ திருப்பங்களோ நிகழ்ந்து விடவில்லை. அங்கு அரசியல், போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது.

**போருக்கு குரல் கொடுக்கும் சிங்கள தேசம்**

அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடும் அந்தத் தேசத்திலே இனக்குரோதமும் போர் வெறி யும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போர்ப் பேரிகைகளைத்தான் எம்மால் கேட்க முடிகிறது.

போரை கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு அங்கு எவ ரும் குரல் கொடுக்கவில்லை. சிங்களத்தின் அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதி கள் வரை, பத்திரிகையாளர்களிலிருந்து பாமர மக்கள் வரை போருக்கே குரல் கொடுக் கிறார்கள்.

தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம் தான் போரைத் திணித்திருக்கிறது.

எமது பிராந்தியத்தைச் சேர்ந்த சார்க் நாட்டுத் தலைவர்கள் கொழும்பிலே கூடிய போது, எமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நாம் அறிவித்த பகைமைத் தவிர்ப்பையும் ஏற்க மறுத்து, அதனை ஏளனம் செய்து போரைத் தொடர்ந்து நிற்பதும் சிங் கள தேசம்தான். ஏற்றுக்கொள்ளவே முடி யாத அவமதிப்பூட்டும் நிபந்தனைகளை விதித்துப் போரைத் தொடர்வதும் சிங்கள தேசம்தான்.

சிங்கள தேசம் ஒரு பெரும் இன அழிப் புப் போரை எமது மண்ணிலே நிகழ்த்தி வருகிறது. இந்த உண்மையை மூடிமறைத்து, உலகத்தைக் கண்கட்டி ஏமாற்ற சிங்கள அரசுகள் காலங்காலமாகப் பல்வேறு அரசி யல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன.

வட்டமேசை மாநாட்டில் தொடங்கி, இன்று அனைத்து கட்சிக் கூட்டம் என இந்த ஏமாற்று நாடகத்தின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட் டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற் றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச் சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர் வினையும் முன்வைக்கவில்லை.

மாறாக, சிங்கள தேசம் தனது படைக் கல சக்தியால் தமிழர் நிலங்களைப் பற்றி யெரிய வைத்திருக்கிறது. தமிழரது அமை தியைக் கெடுத்து, அவர்களது நிலத்தில் அமைந்த வாழ்வை அழித்து, அவர்களை அகதிகளாக அலைய வைத்திருக்கிறது.

**சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப் போகிறது?**

தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தமிழர் தேசத்தை இரண் டாகப் பிளந்து, அங்கு தமிழர் விரோத ஆயுதக்குழுக்களை ஆட்சியில் அமர்த்தி, இராணுவப் பேயாட்சி நடத்துகிறது.

புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத்திட்டத்தை அறிவிப்போம் எனக்கூறிக்கொண்டு, போரை நடத்து கிறது. தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை, அவர்களது பேரம் பேசும் சக்தியை அழித்து விட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன் வைக்கப்போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக் கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது?

தமிழரின் தேசியப் பிரச்சினை விடயத் தில், சிங்களம் அடக்குமுறை என்ற ஒரே பாதையில்தான் சென்றுகொண்டிருக்கி றது. இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் நீதி வழங்கும் என எமது மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக் கையும் இன்று அடியோடு அழிந்துவிட்டது.

சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறு வதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.

**ஆக்கிரமிப்புக்கு என்றுமே இடமளிக்கப்போவதில்லை**

பூமிப்பந்திலே ஈழத்தமிழினம் ஒரு சிறிய தேசமாக இருக்கின்றபோதும நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்திமிக்க இனம். தன்னிகரற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமைமிக்க இனம்.

இப்படியான எமது அருமை பெருமை களையெல்லாம் அழித்து, தமிழீழ தேசத் திலே தமிழரின் இறையாண்மையைத் தகர்த்துவிட்டு, இராணுவப் பலத்தால் சிங் களம் தனது இறையாண்மையை திணித்து விடத் துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக் கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ சிங்கள ஆதிக் கத்திற்கோ என்றுமே இடமளிக்கப்போவதில்லை.

**தொடர்ந்து போராடுவோம்**

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத் தாலும் எத்தனை இடையூறுகளை எதிர் கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடி விற்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட் டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்.

அத்துடன், தங்களது தாராள உதவி களை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக் குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள் கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடு தலைப் பணியைத் தீவிரமாக முன்னெ டுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர் கள் வழியில் சென்று நாம் எமது இலட்சி யத்தை அடைவோமென உறுதியெடுத் துக்கொள்வோமாக. - என்றார். ✱

# தமிழினத்தை உலகுக்கு எடுத்துக் காட்டிய பிரபாகரனின் பெயரை உச்சரிக்கக் கூடாதா?

## ஈழப் பிரச்சினை வலுப்பெற்றால் தமிழகம் பிளவுபட்டு விடும் என்கிறார் பாரதிராஜா!

தமிழ் இனத்தை உலகம் முழுவதும் அடையாளம் காட்டிய பிரபாகரனின் பெயரைச் சொல்லாதே என்கின்றனர். பிரபாகரன் என்றாலே பிரளயம் நடுங்கும். அப்படிப்பட்ட வீரனை வீரன் என்று சொல்லக்கூடாதா? என்னை மிரட்டாதீர்கள்.

ஈழமே தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாதா? உறைக்கும் துறை இல்லையா? ஈழத் தமிழர் பிரச்சினை வலுப்பெற்றால் தமிழகம் பிளவுபட்டுவிடும் என்று இயக்குநர் பாரதிராஜா ஆவேசமாகக் குமுறி முழங்கினார்.

''ஈழத்தமிழர் இன்னல் நீங்க போர் நிறுத்தம் ஒன்றே தீர்வு'' என்ற தலைப்பில் புதுச்சேரியில் கருத்தரங்கு நடந்தது. இதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித் தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

மனித இனம் அழிந்து கொண்டுள்ளது.

> ### காந்திதேசம் காட்டிக்கொடுக்கிறது புத்தர் தேசம் சுட்டுத் தள்ளுகின்றது
>
> புதுச்சேரியில் கருத்தரங்கில் இயக்குநர் செல்வமணி பேசியவை வருமாறு -
>
> கடந்த 1991ஆம் ஆண்டு ராஜீவ் படு கொலை செய்யப்பட்டபோது விடுதலைப் புலிகள்மீது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வெறுப்பு இருந்தது உண்மைதான். ஆனால் 2008ஆம் ஆண்டு அனைத்துத் தரப்பு மக்க ளும் விரும்பக் கூடியவர்களாக புலிகள் உள் ளனர்.
>
> காந்தி தேசம் காட்டிக் கொடுக்கிறது. புத்த தேசம் சுட்டுத் தள்ளுகிறது. யார் தீவிரவாதி என்பதை காலம் சொல்லும். தமிழில் தேசிய கீதம் பாடக்கூடிய நேரம் விரைவில வரும் - என்றார்.

நீ இறையாண்மையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய். புலியைக் காப்பாற்ற பாம்பும் கழுதைகளும் தேவையில்லை. ஈ.வெ.ரா. இருந்தால் பாம்பை அடை யாளம் காட்டியிருப்பார். புலிக்கு இடைஞ் சல் பண்ணாதே. இலங்கைத் தமிழர்கள் தற்காத்துக் கொள்வதற்காக போரிட்டுக் கொண்டுள்ளனர்.

பிரபாகரனின் பெயரைச் சொல்லாதே என்கின்றனர். ஓர் இனத்தை உலகம் முழு வதும் அடையாளம் காட்டிய - வீரமானவரின் பெயரை வீரன் என்று சொல்லக்கூடாதா? பிரபாகரன் என்றாலே பிரளயம் நடுங்கும். என்னை மிரட்டாதீர்கள்.

ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்துப் பேசினால் இறையாண்மை போய்விடும் என்கின்றனர். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கர்நாடக அமைச்சகம் எதிர்ப் புத் தெரிவிப்பது இறையாண்மைக்கு எதிரானது இல்லையா? முல்லைப் பெரி யாறு அணைப் பிரச்சினையில் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாய்; இது என்ன இறையாண்மை?

ராஜீவை கொன்று விட்டனர் என்ற ஒரே காரணத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கிறாயே; ஒரே ஒரு முறை இலங் கையில் என்ன நடக்கிறது எனப் பார்த்து விட்டுவா. 20 ஆண்டு காலமாக அகதிக ளாக இலங்கைத் தமிழ்ர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமிழகத்திற்கு வந்து கொண் டுள்ளனர். மூன்று நாள்களுக்கு முன்னால் திடீர் என ''தாயகம் திரும்பிப் போ'' என்றால் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?

படைபலம், இராணுவ உதவி அனைத் தையும் அனுப்பிவிட்டு தீர்மானம் நிறை

## ஈழத் தமிழர் நிதிக்கு வருமானவரி விலக்கு

ஈழத் தமிழர் நிவாரண நிதிக்குப் பணம் கொடுத்தவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று தமி ழக அரசு அறிவித்துள்ளது.

மத்திய அரசின் நேர்முக வரி விதிப்பு ஆணையம், இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக் கும் முழு வருமான வரி விலக்கு அளித் துள்ளது.

முதல்வர்கருணாநிதி, மத்திய நிதியமைச் சர் ப. சிதம்பரத்துக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது என தமிழக அரசின் செய் திக்குறிப்பு தெரிவிக்கிறது.

# சென்னையில் பிரபாகரனின் பிறந்தநாள் 'கேக்' வெட்டி அமைதியாகக் கொண்டாட்டம்

சென்னை, நவ.28

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாக ரனின் பிறந்தநாள், சென்னையில் நேற்று முன்தினம் 'கேக்' வெட்டிக் கொண்டாடப் பட்டது. இதில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் தலைவர் திருமாவளவன் கலந்துகொண்டார்.

இது சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலை சிறுத்தைகள் சார்பில், இலங் கைத் தமிழர் துயரம் குறித்த ஓவிய கண் காட்சி 'தமிழ் உயிர்' என்ற பெயரில் சென் னையில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. மெமோரியல் ஹோலில் 3 நாள்கள் நடை பெறும் இந்தக் கண்காட்சியின் தொடக்க விழாவிற்கு தொல்.திருமாவளவன் தலைமை தாங்கினார். காசி ஆனந்தன் கண்காட்சியைத் தொடக்கிவைத்தார். நிகழ்ச்சியின் இடையே திடீரென அங்கு இரண்டு 'கேக்' கொண்டு வரப்பட்டன. அந்த 'கேக்'கில் 'பிறந்தநாள் வாழ்த்துக்கள், மேதகு பிரபாகரன்' என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த 'கேக்'கை ஓவியர் வீரசந்தானம் வெட்டினார். திருமாவளவன் உள்பட பலர் அருகேஇருந்தனர். 'கேக்' வெட்டும்போது, 'தமிழர் தேசியத் தலைவர் பிரபாகரன் வாழ்க' என்று கோஷம் எழுப்பப்பட்டது.

பின்னர், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் அங்குவந்த ஒரு தம்பதியின் பெண் குழந்தைக்கு, 'தமிழ் ஓவியா' என்று பெயர் சூட்டினார்.

> ### உயர் நீதிமன்றின் வளாகத்திலும் பட்டாசு வெடித்து 'கேக்' வெட்டப்பட்டது
>
> சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சில சட்டத்தரணிகள் சேர்ந்து விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை பட்டாசு வெடித்து கொண்டாடினர்.
>
> இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக் கத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதைத் தொடர்ந்து அந்த அமைப்புக்கு ஆதரவாகப் பேசுவதற்கும் செயற்படுவதற் கும் தடை உள்ளது.
>
> இந்த நிலையில் சட்டத்தரணிகள் அறி வழகன், சங்கரன், குணராஜா, எட்வின் ஜெயக்குமார், ராஜா உட்பட சில சட்டத்தர ணிகள், சென்னை உயர்நீதிமன்ற வளாகத் தில் நேற்றுமுன்தினம் மதியம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை கொண்டாடினர். அவர்கள் பட்டாசு கொளுத் தினர். பின்னர் அங்கிருந்தவர்களுக்கு கேக் கொடுத்தனர். பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், ''இலங்கையில் போர் நிறுத்தம் வர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இதனால் அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். எனவே இந்த விவகாரத்தில் மத்திய அரசு உடனே தலையிட வேண்டும்'' என்று தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனமழை, கடுங்காற்றால் குடாநாட்டில் ஏற்பட்ட பாதிப்புகள் :

## யாழ்.நகரில்



பஸ் நிலையம் முன்பாக விழுந்துள்ள பாரிய வேப்பமரம்



வெள்ளத்தில் மூழ்கியுள்ள வர்த்தக வங்கி



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோர்

## வலி.கிழக்கில்....



அச்செழு கொலனிப் பகுதியில் சேதமடைந்த பல வீடுகளில் ஒன்று



வெள்ளத்தில் மூழ்கியுள்ள வெங்காயத் தோட்டம்

## தாவடி உப்புமடம்....



உப்புமடம் சந்தியில் இருந்து யாழ். நோக்கிய காங்கேசன் துறை வீதி.

## வலி.தெற்கில்....



ஈவினை கிழக்கில் காற்றால் கூரை தூக்கிவீசப்பட்ட வீட்டின் முன்னால் உரிமையாளர்கள்



சுன்னாகம் வீதியில் சரிந்து நிற்கும் மின் கம்பங்கள்

## கோண்டாவில் பகுதியில்



ஆசிமடம் விநாயகர் ஆலய முன்றலில் வீழ்ந்து கிடக்கும் அரசமரம்

# குடாநாட்டின் சில பிரதேசங்களில் நேற்றுமின்சார விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.28

பெருமழை மற்றும் கடுங்காற்றினால் குடாநாடு முழுவதிலும் தடைப்பட்டிருந்த மின்சார விநியோகம் நேற்று தொடக்கம் சில பிரதேசங்களில் மீண்டும் நடைபெறுகிறது.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கோம்பயன்மணல் ஆகிய மின்கடத்தி நிலையங்களின் (FEEDERS) சேவைப் பகுதிகள் சிலவற்றுக்கு நேற்று மின்சாரம் விநியோகிக்கப்பட்டது.

அந்தந்த மின் கடத்தி நிலைய சேவைப் பகுதிகளில் அறுந்து போன மின் கம்பிகளை மீண்டும் தொடுத்துச் சரிசெய்வதன் மூலம் மேற்படி பகுதிகளில் மின் விநியோகம் சீராக்கப்பட்டதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. மின் கம்பிகள் அறுந்து சேதமடையாத பகுதிகளுக்கும் படிப்படியாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

இதனால் இப்போது மின்விநியோகம் கிடைக்கும் பல பகுதிகளில் மின் வெட்டு இல்லை. ஏனைய பகுதிகள் சீராக்கப்பட்டு விநியோகம் விஸ்தரிக்கப்படும் போது மீண்டும் மின் வெட்டு தவிர்க்க முடியாதது என்று அறியப்படுகிறது.

குடாநாட்டில் ஏனைய மின் கடத்தி நிலையங்களின் சேவைப்பகுதிகளிலும் மின் விநியோகத்தை விரைவில் சீராக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

(அ)

## தெற்காசியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்தியத்திலுள்ள நாடுகள் ஒன்றுபட வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மும்பையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களை கண்டித்து ஜனாதிபதி விடுத்துள்ள விசேட செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதலினால் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் சொத்துக்களுக்கு சேதங்கள் விளைவிக்கப்பட்டதை எனது அரசாங்கம் கடுமையாக கண்டிக்கிறது.

இந்தியாவின் ஜனநாயகத்தை ஸ்திரமற்ற தாக்குவதற்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகில் எந்தவொரு இடத்தில் பயங்கரவாதம், வன்முறைகள் இடம்பெறுமானால் அதனை வேரோடு அழித்துவிட வேண்டும். கடந்த மூன்று தசாப்தகால மாக நாமும் பயங்கரவாதத்தால் நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நாடென்ற ரீதியிலும் அதனை அழிப்பதற்கு முன்னோக்கிச் செல்லும் நாடென்ற ரீதியிலும் இந்திய அரசாங்கத்தினதும் மக்களினதும் சோகத்தை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம். தெற்காசியாவில் பயங்கரவாதத்தை வேரோடு அ...பதற்கு நாமனைவரும் ஒன்றுபட வேண்டும் - என்று உள்ளது. (அ)

## மும்பையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைத்த தகவல்களின் படி, பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அல்லது அனைவரும் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நேற்றிரவு தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் மன்மோகன் சிங், இந்தத் தாக்குதல் சம்பவமானது இந்தியாவுக்கு வெளியிலிருந்து இயக்கப்பட்ட தீய சக்திகளால் நடத்தப்பட்டது என்றும் இது போன்ற சம்பவங்களுக்கு இந்தியா ஒரு போதும் இடமளிக்காது என்றும் தெரிவித்தார். எனினும், பாகிஸ்தான் உட்பட எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டு அவர் குற்றஞ்சாட்டியிருக்க வில்லை.

மும்பாயில் ஒன்பதுக்கு மேற்பட்ட இடங்களில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ மூன் ஆகியோர் உட்பட அநேக உலகத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இத் தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அதேவேளை, இது விடயத்தில் இந்தியாவுக்கு உதவத் தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தானும் அறிவித்துள்ளது.(அ)

(3 ஆம் பக்கத்தில் விரிவான செய்தி)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்றும் -

வவுணதீவு-பத்தைத்தட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் விவசாயியான பெரியதம்பி முத்துப்பிள்ளை (வயது-45) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேவேளை வாகரை பனிச்சங்கேணி - கடற்கரை வீதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஞானகுரு மோகனதாஸ் (வயது-32) என்பவர் உயிரிழந்தார்.

வெல்லாவெளி-ஒட்டியாந்துரை பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் குலேந்திரன் (வயது-27) என்பவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

## புலிகளின் குரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நாள் அன்று புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது விமானப் படை விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 10 பேர் படுகாயமடைந்திருந்தனர். அத்துடன் கட்டடங்கள் யாவும் முழுமையாக அழிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## ஈழத்தமிழரின் பிரச்சினைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியலிட்டுள்ள வைகோ தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கான பயணத்தை விவரித்தார்.

இலங்கையின் பிரச்சினை இனிமேலும் உள்நாட்டு விவகாரம் அல்ல என அவர் கூறியுள்ளதாக வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் அக்கறையுள்ள அனைவரும் இந்த நெருக்கடிக்கு காரணமான அரசியல் யதார்த்தத்தை கணக்கிலெடுக்க வேண்டும் என்றும் வைகோ கோரியுள்ளார்.

தனி சுதந்திர தமிழீழமே ஒரேயொரு சாத்தியமான தீர்வு என வைகோ தனது உரையில் ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார்.

மொண்டிநீக்ரோ, கிழக்கு திமோர், கொசோவோ போன்று தமிழ் மக்களும் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மூலமும் அதன் பின்னர் நடந்த தேர்தல் மூலமும் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமைகான தமது ஆணையை வெளியிட்டுள்ளனர் என வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கை சிங்கள தேசம், தமிழர் தாயகம் குறித்த பேச்சிற்கே இடமில்லை என சிங்களத் தலைவர்களே வலியுறுத்தும் போது தமிழர்கள் எவ்வாறு ஒன்றாக வாழ முடியுமெனவும் அவர் கேள்வியெழுப் பியுள்ளார்.

இலங்கை அரசு தமிழர்கள் மீது திணித்துள்ள இனப் படுகொலை காரணமாக, தமிழ் நாட்டிலுள்ள ஆறரைக் கோடி தமிழர்களும் கடும் சீற்றமடைந்துள்ளனர். இந்த எழுச்சி தமிழ் நாடு எல்லையையும் கடந்துள்ளமை புதுடில்லியில் இந்தியாவின் 17 மாநில மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் மூலம் தெரியவந்துள்ளது.

யூதர்கள் இனப்படுகொலைக்கு உட்பட்ட வேளை பிரிட்டன் இஸ்ரேலின் உருவாக்கத்திற்கு உதவியதையும் அங்கு வைகோ சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது நாட்டில் சமாதானத்தை விரும் பும் புலம்பெயர்ந்த தமிழர்களை கொண்டுள்ள பிரிட்டனுக்கு தமிழீழம் உருவாவதற்கு உதவுவதற்கான தார்மீகக் கடமையுள்ள தாக வைகோ குறிப்பிட்டார். (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org